★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 26 நம் 28 இதழ் 149

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10—7—83

## கூட்டணித்தலைமைப்பீடத்துக்கு திரும்பவும் பழையமுகங்கள்!

### வி. பி.யும் ஒரு பதவி பெற்றார்!!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவராக நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் செயலாளர் நாயகமாக எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கமும் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர். நல்லூரில் நேற்று நடந்த கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சிரேஷ்ட துணைத்தலைவராக மன்னார் மாவட்ட சபை உறுப்பினர் திரு. வே. ஆனைசபிள்ளை தெரிவானார்.

மற்றும் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் விபரம்வருமாறு:

துணைத்தலைவர்கள்: எம். பிக்களான திரு. இரா. சம்பந்தன், பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. த. இராசலிங்கம், திரு. சிவசிதம்பரம்,

அமைப்பு நிர்வாகச்செயலாளர் கோப்பாய் எம். பி. ஆகு ஆலாலசுந்தரம்.

இளைஞர் இயக்கச்செயலாளர் திரு. இரா. பன்னீர்ச்செல்வம் மகளிர் இயக்கச்செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தொழிற்சங்கப்பொறுப்புச் செயலாளர் திரு. க. இராசேந்திரன்

[10-ம் பக்கம்பார்க்க]

# வவனியா காந்தீயம் பண்ணை அரசுசுவீகரிப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

வவனியாவிலுள்ள காந்தீய இயக்கத்தின் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான கோவில்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ள பண்ணை நிலத்தையும், காந்தீய இயக்க அனாதை சிறுவர் இல்லக் கட்டடங்களையும் அரசாங்கம் சுவீகரிக்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பான அறிவித்தல் வவனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவனியாவில் உள்ள கோவில்குளம் என்ற காணியில் காந்திய இயக்கம் பண்ணை அமைத்து கட்டிடங்களை நிறுவி கிணறுகளை கட்டியதுடன், அனாதை சிறுவர் இல்லங்களையும் அமைத்திருந்தது.

காந்திய இயக்கத் தலைவர்கள் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து காந்தீய பண்ணையின் நிர்வாக வேலைகள் தடைப்பட்டன.

சிறுவர்கள், கர்ப்பிணி மாதர்களுக்கான பாலர் விநியோகம் தடைப்பட்டதுடன் சிறுவர் பாடசாலைகளும் இயங்காமல் விட்டன.

தற்போது காந்திய இயக்கத்தின் கோவில்குளம் பண்ணையை அரசு சுவீகரிக்க முடிவு செய்துள்ளது. (மா)

## கூட்டணி 'பொலிட்பீரோ'

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் அதிகார சபை (பொலிட் பீரோ) உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., திரு. இரா. சம்பந்தன் எம். பி., திரு. தா. சிவசிதம்பரம் எம். பி. மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், சட்டத்தரணி எஸ். நவரத்தினம் (கரிகாலன்).

(சேவ் தி-மா)

## எண்ணெய் ரயில் யாழ். வந்துசேர்ந்தது!

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட எண்ணெ ரயில் நேற்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

ஆறு எண்ணெய்த் தாங்கிகளைத் தாங்கிக்கொண்டு வந்த எண்ணெ ரயில், யாழ்ப்பாணத்தில் 5 ராங்குகளையும், சுன்னாகத்தில் ஒரு ராங்கியையும் இறக்கிவிட்டு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை சென்றடைந்தது. இந்த ரயில் இன்று காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளது.

இதுதவிர வேறு எந்தவித ரயில் சேவையும் நடைபெறவில்லையென புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

பெற்ரோல், டீசல், மண்ணெண்ணெ ஆகிய மூன்றும் கொண்ட ராங்குகள் வந்துள்ள போதிலும், சகல எரிபொருள் நிலையங்களிலும் பாவனையாளர்கள் கியூவில் நின்றுவாங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (மா)

## இளைஞர் கைது

[யாழ்ப்பாணம்]

பன்னாலையைச்சேர்ந்த பத்மநாதன் லோகநாதன் (18வயது) இளைஞர் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். [மா]

## கருகம்பானையிலும் பஸ் தீக்கிரை

(மாவிட்டபுரம்)

சேந்தாங்குளம் சந்திக்கு அண்மையில்வைத்து இ. போ. ச. பஸ் ஒன்று நேற்றுக் கடத்தப்பட்டுக் கருகம்பானையில் எரிக்கப்பட்டுள்ளது! மூன்று இளைஞர்களைக் கொண்ட கோஷ்டி இதனைச் செய்துள்ளது.

கீரிமலை — யாழ்ப்பாணம் சேவையிலீடுபட்டிருந்த 23 ஸ்ரீ 7985 இலக்க பஸ் இரவு சுமார் 7-45 மணிக்குச் சேந்தான்குளம் சந்திக்கண்மையில்வந்ததும் அதே பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த மூன்று இளைஞர்கள் திடீரென கத்தியுடன் எழுந்து சாரதியையும் நடத்துநரையும்அதில் பிரயாணம் செய்த மற்றும் ஐந்து பேரையும் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி இறக்கிவிட்டு பஸ்ஸை எடுத்துச் சென்றனராம். பின்னர் இந்த பஸ் கருகம்பானைச் சந்திக்கு அணித்தாகவுள்ள மயானத்தில் அருகில் எரிந்த நிலையில் காணப்பட்டது.

இதுபற்றிச் சாரதி ஏ. இராஜரத்தினமும் நடத்துநர் எம். பெருமாளும் காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்துள்ளனர். (வ)

## முக்கிய அறிவித்தல்

### ஆர். வி. ஜி. போலி பீடிகள்

எமது ஆர். வி. ஜி. பீடி - கட்டு, பண்டல் மாதிரி போலி கட்டு பண்டல் லேபல்கள் அச்சடித்து அதில் தரம் குறைவான பீடிகளை தயாரித்து கடைகளில் விநியோகம் செய்து வருவதாக அறிகிறோம்.

இது ஒரு சட்ட விரோத செயல் ஆகும்

இந்த போலி லேபல்களை அச்சடிக்கும் அச்சகங்களை லேபல் விநியோகிப் போர், விற்பனையாளர்கள் இவர்கள் பற்றிய துப்புக் கொடுப்போருக்கு தக்க சன்மானம் வழங்கப்படும். தகவல்கள் மிகவும் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

இங்ஙனம்,

ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்,
275, பீச் றோட்,
யாழ்ப்பாணம்.

போன்: 22064

7861

★ சுதுமலை ★ சங்குவேலி ★ இணுவில்

## 3 உபதபால் நிலையங்களுள் நுழைந்தஇளைஞர் அட்டகாசம்

(மானிப்பாய்)

நேற்று மாலை வடபகுதியிலுள்ள மூன்று உபதபால் நிலையங்களுக்குள் கத்திகளுடன் நுழைந்த இளைஞர்கள் அட்டகாசத்தை மின்னல் வேகத்தில் நடாத்தி விட்டு மறைந்து விட்டார்கள்!

சுதுமலை, இணுவில், சங்குவேலி ஆகிய மூன்று உபதபால் நிலையங்களே நேற்று இளைஞர்களின் கைவரிசைக்குள்ளானது.

மாலை 4 மணிக்கும் 5 மணிக்குமிடையில் மூன்று இளைஞர்கள் பதினைந்து நிமிட நேர வித்தியாசத்தில் தபால்நிலையங்களுக்குள் கத்

(10-ம் பக்கம்பார்க்க)

## 6 மணியுடன் பஸ்சேவைகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரிலிருந்து சகலஇடங்களுக்குமான பஸ்சேவைகள் நேற்றிரவு 6 மணியுடன் ரத்து செய்யப்பட்டன. (சு)

## தருமர், கோவையை சந்தித்தனர்!

(கொழும்பு)

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கமும், கோவை மகேசனும் அவசரகாலச்சட்டத்தின் 17 பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் படியே வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தகவலை நேற்று அவர்களைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேசிய சட்டத்தரணிகள் எஸ். ருத்திர மூர்த்தியும், ஆர். சீனிவாசனும் தெரிவித்தார்கள்.

6-ம், 7-ம், 8-ம் திகதிகளில் வெலிக்கடையில் தனித்தனி அறையில் இவர்கள் பூட்டி வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது வண பிதாக்கள் வைக்கப்பட்டுள்ள பகுதியில் விடப்பட்டுள்ளனர் என்றும் அவர்களைச் சந்தித்த சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

## கிறித்துவ ஆயர்குழு திருமலை அகதிகளைச் சந்தித்தனர்!

[திருகோணமலை]

திருகோணமலைக்கு விஜயம் செய்த கிறித்துவ ஆயர் பாசறையின் குழு இங்கு வன்செயல்களால் பாதிக்கப்பட்டு அகதி

[10-ம் பக்கம் பார்க்க]

## KEEN இன்ஸ்ரிரியூட்

மணியம்ஸ்கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 15-7-83

1. றேடியோ ரெலிவிஷன் டெக்னோலொஜி
2. ஹொட்டல் மனேஜ்மென்ட் (HOTEL MANGEMENT)
3 TELEX OPERATORS
4 எலக்ரிக்கல் வயரிங்
5. GERMAN AND FRENCE வகுப்புகள்

மேலும் விபரங்கள் 11-7-83 பத்திரிகையில் (7926)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பின்வரும் காணிகள் விற்பனைக்கு உண்டு. விராலி வீரோட்டில் நெற்பரப்பு-4, வைத்தியசாலைக்கு அருகாமையில், 6 பரப்புக்காணியும் ஒரு வீடும், மைமன் வீதியில் ஒரு வீடு. நீர்வேலியில் 5 பரப்புக் காணி, கன்னுதிட்டியில் 6 பரப்புக்காணி தொடர்பு: இ. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி, 52 மைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். தொலைபேசி: 22334. 7919

யாழ். கோரதிவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. தருமலிங்கம், கைதடி நுணாவில், சாவகச்சேரி. 7925

கோண்டாவில் கிழக்குத் தபாற்கந்தோருக்கு அருகாமையில் நல்ல நீர்க்கிணற்றுடன் வீடுகட்டக்கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7924 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 7924

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள தெல்லுபனம் பொருள் கூட்டுத் தாபனக் கந்தோருக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் உவது காணியாக சகல வசதிகளுடன் 6 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு Mr மாணிக்கசந்திரம் குமரகோட்டம் நீதிமன்ற வீதி, மல்லாகம். 7920

கொடிகாமம் பருத்தித்துறை றோட்டில் ஒன்றரை ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. வீடுகட்டக்கூடியதும் தென்னை, மா, பலா பயிரிடக்கூடியதும் மின்சார வசதியும் உள்ளது. தொடர்புகொள்க: இராமசேனைவிலுவனர் கொடிகாமம். 7914

நல்ல நிலைமையிலுள்ள CANON AE-1 கமறா உடன் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம் விளம்பரதாரர் 13, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 7915

## விற்பனைக்கு

வீடு கட்டக்கூடிய இரண்டு பரப்புக் காணி, கிணற்றுடன் நீர்வேலி வடக்கில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: சா. சோமதேவசர்மா, அரசகேசரிப்பிள்ளையார் கோவில், நீர்வேலி. 7859

கட்டுமரம்—(அல்பிசா மரம்) (5 கட்டி 11 முழம்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் நேரம் காலை 6-00—9-00வரை சுந்தரன் றேடேர்ஸ், பழைய கண்டி, காரைநகர். (நேரிலும் பார்வையிடலாம்). 7916

பாவனையிலுள்ள C N 9000 தொடர் இலக்க A 40 கார் உடன் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 17,000/- வரை. S S நரசிங்கம் [J P.] தெற்குபுரம், சுழிபுரம். 7886

28 ஸ்ரீ தொடர்பிலக்கம் கொண்ட E L F 250, தேக்க பொடி டிரக், பிளுக்ஸ் சமிதம்] விற்பனைக்குண்டு. ராம் பிரதர்ஸ், 87, கண்டி றோட், கிளிநொச்சி. 7896

புதிய பாவிக்காத 10 H P இண்டியன் மோட்டரும், MEM ஸ்ராட்டரும் விற்பனைக்குண்டு. சுபசபாடி, மடத்தடி, தெல்லிப்பளை. 7912

வட்டுக்கோட்டை மேற்கில் கண்ணகையம்மன் கோயில் வீதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடுகட்டக் கூடிய 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திரு. நா. ஏகாம்பரம் சட்டத்தரணி வட்டுக்கோட்டை. 7855

யாழ்ப்பாணம் அரசலிவீதி மாநகரசபை எல்லைக்குள் வீடும் கடையும் 1½ பரப்பு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வினவி 266/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7902

404 பேர்ஜோ 8 ஸ்ரீ தொடர் பிலக்க நல்லநிலைமையிலுள்ள வெள்ளை நிறக்கார் விற்பனைக்குண்டு. ம. மாணிக்கவாசகர், 'ஸ்ரீமத்.' பொற்பதி வீதி, கொக்குவில். (7878)

## விற்பனைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய எட்டுப்பரப் புக்காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: மு. நடராத்தினராசா தபால் கந்தோருக்கு அருகாமையில் பொற்பதி றோட் கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் தொலைபேசி 22694 அல்லது 23150 (7877)

## தேவை

மானிப்பாயில் இயங்கும் தமயந்தி அச்சகத்திற்கு பிளேற்றன் மெஷின்மைண்டர், கொம்பசிற்றர், கணக்கியல் அடைச்சு, சுருக்கெழுத்து ஆகிய மூன்றும் தெரிந்த எழுதுவினைஞர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும், அல்லது விண்ணப்பிக்கவும். 7900

மூளாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் ஒரு வீடு வாடகைக்குத்தேவை. கடித மூலம் தொடர்புகொள்ளவும். N. கனகசபை அரசினர் வைத்தியசாலை, கோண்டாவில். 7904

கார் லொறி சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள, விற்பனைப்பிரதிநிதி அனுபவம், கணக்காளர் அனுபவம், கட்டிடத்தொழில் அனுபவம், துணிவு திறமையாற்ற கண்ணியமான இளைஞருக்கு வேலை தேவை. விளம்பர இல: 7911, மே./பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 7911

யாழ்ப்பாணத்திலுஸ்டான்லி வீதியில் பிரபல லேத்மெஷின் (Lathe தொழிற்சாலைக்கு முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர் உடன் தேவை. மின்சார இரும்புச்சாமான்கள், வார்உதிரிப்பாகங்கள், வர்த்தகத்தில் அனுபவமுள்ள பங்குதாரர் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். 54 33rd Lane, Colombo-6 7909

கொக்குவில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்திற்கு ஆங்கிலம் பேச எழுதத்தெரிந்த பணிப்பெண் தேவை. நேரில் இங்கள் என்பவரை 09 - 07 - 83 விருந்து 12-07-83வரையில் திருமதி பூமாதேவி நடராஜா டச்றோட் தொல்புரம், என்ற முகவரியில் வந்து பார்க்கவும். 7922

யாழ். நகர எல்லைக்குச் சமீபமாக பகுதி/தனிவீடு வாடகைக்குத்தேவை. பாலேந்திரா கணக்காய்வாளர் காரியாலயம் இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில். 7923

## பயிற்சி

Computer Programming ஆகியவை Apptitude Test சித்திபெய்துபவர்களுக்கு மட்டும் வகுப்புக்கள் ஆரம்பம் 16-7-83 Apptitude Test 12-7-83இல் நடைபெறும். Radio Shack கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்க பதிவாளர் தேசியக்கல்வி நிறுவனம் மொம்சாக்கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7873

## WANTED

An experienced and succcssful Field Sales Representatives to sell Consumer products, Pharmacuticals, Argo-chemicals Should be willing to work anywhere in the Northern Province Applicants should have a good personality and high command of the languages Security Rs 5000/- Remuneration attractive - not less than Rs 2500/- a month. Apply Autos Ltd. Jaffna. 7917

Wanted for a firm in Jaffna a Qualified Mechanical Engineer or Assistant. Age between 40-45 years. with Experience in:- Foundry work -Casting, Assembling of Motors and Water Pumps Operation of Lathe Machines To be in charge of work shop of 10 to 12 persons Retired persons can also apply Salary Negotiable Apply:- before 23-07-83 to Advt No 7891 C/o Eelanadu, Jaffna. 7891


## வீதி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாது சீர்கேடு அடைந்த நிலையில் உள்ளது. இதனால் தினமும் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் நூற்றுக்குமதிகமான நோயாளர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் சிரமம் அடைகின்றனர்.


யாழ்நகரில்

பலவகைப் பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வகுப்புகள்

BUILDERS QUANTITIES PART I & II
CITY & GUILDS LONDON MAY/JUNE 1984
பரீட்சைக்கான மாலை நேர வகுப்புகள்

ஆரம்பம்: 15-7-83

KEEN INSTITUTE, மணியம்ஸ் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

7887

வான் விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
டெலிக்கா T120 V
ஹை ஏஸ் (HY ACE R. H30 V
டெலிக்கா L 300
கைவசம் உண்டு.

வித்யா மோட்டர்ஸ்

70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23255 (7893)

ஐந்தாவது ஆண்டு பூர்த்தி தினம்

மிகக் குறுகிய காலத்தில் மக்களின் மனத்தில் இடம்பிடித்துக் கொண்ட அக்காய் றெக்கோடிங் (B)பார் ஸ்தாபனத்தார் தமது ஐந்தாவது ஆண்டு நிறைவை நினைவு கூரும்வேளை

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தமது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்

★ பாடல்கள் ஒலிப்பதிவிற்கும்

★ வீடியோ படங்கள் வாடகைக்கும்

மற்றும் எலக்ரோனிக் கடிகாரங்களுக்குரிய பற்றறிவகைகளுக்கும் சகலவிதமான பிலிம்றோல் FILM ROLL அன்பளிப்புப் பொருட்கள் அனைத்திற்கும்

தெல்லிப்பளையில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட ஒரே ஒரு ஸ்தாபனம்

★ உங்கள் இல்லங்களிலிருந்தே வீடியோ படங்களை தெரிவுசெய்யக்கூடிய வகையில் எங்கள் வீடியோபட விபரத்திரட்டு இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

அக்காய் றெக்கோடிங் பார்

காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.

★ இன்று 2 மணிமுதல் 2-15 மணிவரை "கான அமிர்தம்" என்னும் எமது நிகழ்ச்சியை வானொலியில் கேட்டு மகிழலாம். (7918)

# பி. எல். ஓ. ஒற்றுமை பாதுகாக்கப்பட அணிசேரா இயக்கம் பாதுகாப்பு!

## யாஸீரிடம் இந்திய பிரதிநிதி அறிவிப்பு!

புதுடில்லி, ஜூலை 9 பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் தோன்றியுள்ள பிரிவினைகளை நீக்கி அந்த இயக்கத்தின் ஒற்றுமை பேணிக் காக்கப்பட அணிசேரா இயக்கம் தகுந்த பாதுகாப்பு வழங்கும் என்று அணிசேரா இயக்க தலைமை நாடான இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய சார்பில் அதன் பிரதிநிதி திரு ரொமேஷ் பண்டாரி பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு யாசிர் அரபாத்தை டுனீஷியஸ் நாட்டில் நேற்றுச் சந்தித்தார். அச்சந்திப்பின்போதே அவர் இந்திய பி எல். ஓ. இயக்கம் குறித்து கொண்டுள்ள மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் துரதிர்ஷ்ட வசமாக பிளவுகள் தோன்றியுள்ளதை இந்தியா அறிந்துள்ளதென்றும், இப்பிளவுகளை நீக்கி இவ் இயக்கத்தை மீண்டும் பூரண பலத்துடன் இயங்கச் செய்ய அணிசேரா இயக்கம் சார்பில் இந்தியா தீவிரமாக செயல்படுமென்றும் திரு பண்டாரி மேலும் கூறினார்.

திரு. பண்டாரி பிரதமர் திருமதி இந்திரா காந்தியால் பாலஸ்தீன நிலவரம், மேற்காசியா, மத்திய கிழக்கு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வர அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இவர் தமது சுற்றுப் பயண இறுதியில் வெளியிடும் அறிக்கை கொண்டு அணிசேரா இயக்கம் சார்பில் இந்தியா மேற்குறிப்பிட்ட பகுதிகளின் நிலவரங்கள் குறித்து ஆவன செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வார ஆரம்பத்தில் தமது சுற்றுப் பயணத்தை ஆரம்பித்த திரு பண்டாரி, மேற்காசிய நிலவரங்கள் குறித்து சிரிய அதிபர் திரு. அசாத்துடனும், ஏனைய சிரேஷ்ட சிரிய அமைச்சர்களுடனும் பேச்சுக்களை நடத்தினார் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு 2ம் வட்டார ஸ்ரீமுருகன், ஸ்ரீநாகேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 25ம் திகதி தேர்த் திருவிழாவும், 26ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

### இராஜினாமா!

காத்மண்டு ஜூலை 9

இந்து இராச்சியமான நேபாளத்தில் எட்டு அமைச்சர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர். இவர்களின் இராஜினாமாக்களை மன்னர் பிரேந்திரா ஏற்றுக் கொண்டுள்ளார்.

நேபாள பிரதமர் திரு சூரிய பகதூர் தப்பாவுடன் கொண்டிருந்த கருத்து மோதல்களை அடுத்தே இந்த அமைச்சர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

## வீட்டுக் கூரை மீது சுகப்பிரசவம்!

புதுடில்லி, ஜூலை. 9

குஜராத்மாநிலத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தமது வீட்டுக்கூரைமீது குழந்தையொன்றைப் பிரசவித்தார்!

கடந்த யூன் 22ம் திகதி கடும்மழை காரணமாக இப் பெண்ணின் வீட்டினுள் வெள்ளம்புகத்தொடங்கியது. அவ்வெள்ளத்திலிருந்து தப்புவதற்காக இவர் தனது வீட்டின் கூரைமீது அன்றைய தினம் இரவு ஏறி இருக்கலானார்!

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த இவருக்கு கீழ இறங்கமுடியாதநிலை! ஏனெனில் வெள்ள நீரின் அளவு படிப்படியாக உயர்ந்து கொண்டிருந்தது. இதேவேளை இவரது பிரசவ வேதனையும் ஆரம்பமாகவே செய்வதறியாது தாமிருந்த கூரைமீதே தமது குழந்தையை இவர் பிரசவித்தார்!

இப்பிரசவத்துக்குப் பின்னரும் நீர்மட்டம் குறையாததால் அவர் மூன்றுதினங்கள் உணவின்றி அக்கூரை மீது இருக்கவேண்டியதாயிற்று! பின்னர் ஒருவாறு அயலவர்களால் இவர் காப்பாற்றப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி இப்பகுதிக்குச்சென்ற நிருபர்களிடம் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் நீர்மட்டம் 5 அடியிலிருந்து 15 அடிவரை உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

## வரதட்சணைக் கொடுமை: இந்திய அரசு கடும் நடவடிக்கை!

புதுடில்லி, ஜூலை 9 வரதட்சணை, சீதனப் பிரச்சினைகள் சம்பந்தமாக குற்றங்கள் புரிவோர்மீது கடும் நடவடிக்கைகளை எடுக்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இக்குற்றங்கள் மீது கடும் தண்டனைகளை வழங்கும் வகையில் குற்றச் சட்டங்களில்திருத்தம் கொண்டு வரப்படுமென்றும், இதற்கான திருத்த மசோதா விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் பிடிஆணை இன்றி மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்யவும், அவர்களுக்குப் பிணை வழங்குவது நிறுத்தப்படவும் அதிகாரங்கள் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இத்துடன் பெண்களைக் கொடுமைப் படுத்துவோருக்கு மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனையும் வழங்கப்படும். திருமணமான பெண்ணொருவர் ஏழு ஆண்டுகளுக்குள் இறக்கும் பட்சத்தில் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிடப்படும்.

அண்மைக் காலங்களில் சீதனக் கொடுமைகள் இந்தியாவில் அதிகரித்து வந்துள்ளன. பல வெளிநாடுகளின் கவனத்தையும் பெறும் வகையில் இக்கொடுமைகள் வியாபித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இந்திய கிரிக்கெட் அணிக்கு இந்திரா பாராட்டுபசாரம்!

புதுடில்லி, ஜூலை 9 "புறூடென்ஷல் உலகக் கிண்ண" கிரிக்கெட் பந்தயத்தில் இந்திய அணி காட்டிய ஒற்றுமை இந்திய தேசத்துக்கு பெருமையைத் தருகிறது" என்று இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி தெரிவித்தார்.

கிரிக்கெட் 'உலகக் கிண்ணத்தை' வென்ற இந்திய அணியைப் பாராட்டி பிரதமர் திருமதி காந்தி உபசாரம் ஒன்றை நேற்று நடத்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும், 'உலகக்கிண்ணத்தை சுவீகரித்ததோடுமட்டும் திருப்தியடையாதுமேலும் சிறப்பட ஆடிச் சிறந்த வெற்றிகளை எதிர்காலத்திலும் பெற வேண்டும்' என்று இந்தியக் கிரிக்கெட் அணியை வாழ்த்தினார். இப்பாராட்டு உபசாரத்தில் இந்திய லோக்சபா சபாநாயகர் திரு பல்ராம் ஜாக்கரும் கலந்து கொண்டார்.

இது இவ்வாறிருக்க இந்திய கிரிக்கெட் அணித் தலைவரின் பெயரையும், இந்திய அணியின் வெற்றியையும் கௌரவிக்கும் வகையில் ஹோட்டல் ஒன்றுக்கு புதிய பாணியில் பெயரிடப்பட்டுள்ளது 'கபில்' என்ற அந்த ஹோட்டலின் வரவேற்பு மண்டபத்துக்கு 'பவிலியன்' என்றும். பிரதான மண்டபத்துக்கு உலகக் கிண்ண இறுதிப்பந்தயம் இடம் பெற்ற மைதானமான 'ஓவல்' பெயரும் சூட்டப்பட்டுள்ளது. இதற்றுடன் மதுபானச் சாலைக்கு 'சிக்ஸர்' என்றும் பெயரிடப்பட்டுள்ளது. (இ)

## பங்களாதேஷில் பொதுத்தேர்தல்

### இராணுவநிர்வாகி எர்ஷாத் அறிவிப்பு!

டாக்கா, ஜூலை 9 பங்களாதேஷில் பொதுத் தேர்தல் நடத்தப்படவிருப்பதை அறிவித்து இராணுவ நிர்வாகி லெப்டினன்ட் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் தேர்தல் அட்டவணை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு இவ் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளமை பங்களாதேஷில் படிப்படியாக ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயன்று வருவதைக் காட்டுவதாக அமைகிறது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பங்களாதேஷ் இராணுவச் சட்டநிர்வாகி ஜெனரல் எர்ஷாத் தொலைக்காட்சி, வானொலிச் சேவைகளில் தமது தேர்தல் அட்டவணையை நேற்று வாசித்தார். அப்போது 85-ம் ஆண்டு மார்ச்சில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமென்று அவர் தெரிவித்தார். இப்பொதுத் தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்கள் இவ்வருட இறுதிப்பகுதி, அடுத்த வருட முற்பகுதி ஆகியவற்றில் நடத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## அஸாமில் அகதிகள் வரவை தடுக்க 160 அடி உயர சுவர்!

புதுடில்லி, ஜூலை 9. பங்களாதேஷிலிருந்து அகதிகள் வருவதைத்தடுக்க அஸாம் அரசு நூற்றிஅறுபது அடி உயரமான சுவரைத் தனது எல்லைப்புறத்தில் நிறுவ உத்தேசித்துள்ளது.

இதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசிடமிருந்து அஸாம் மாநில அரசு கோரியுள்ளது. பங்களாதேஷ் அஸாம் மாநிலத்தை அடுத்து அமைந்துள்ளது இதனால் இம் மாநிலத்தினுள் அந்நாட்டில் இருந்தும் அகதிகள் படையெடுத்த வண்ணமிருக்கின்றனர்.

அஸாமில் நிலவிவரும் கொந்தளிப்பு நிலைக்கும் இவ்வாறு அகதிகள் வருகையே பிரதான காரணமாகும். பங்களா அகதிகளுக்கு இங்கு குடியிரிமைகள் வழங்கப்படுவதையும், மாநில தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதையும் எதிர்த்தே அஸாமில் கலவரங்கள் தோன்றியிருந்தன. இக்கலவரங்கள் காரணமாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான பங்களாதேஷ் அகதிகள் கொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: வைரம்

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
"ரெருசோ மாபிள் நிலம்"
(அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்)
ரெருசோ கொன்ருக்ரேஸ் & கொன்சல்ரன்ஸ்
THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS
69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Specialist in Terrazzo Flooring According to CP 204



# தரத்திற்கும் தூய்மைக்கு
# புதுச்சுவை குன்றாத் தன்மைக்
# உத்தரவாதத்துடன்



பாலே இயற்கையின் அதி உன்னத மான உணவு. நெஸ்லே வழங்கும் நெஸ்பிறே உங்கள் குழந்தைக் கென விசேடமாகப் பதனிடப்பட்ட சுத்தமான, சத்துமிக்க பால்.

பால் பதனிடும் நுட்பத்திலும் போஷாக்கு ஆய்விலும் உலகி லேயே தலைசிறந்த ஒன்றான நெஸ் லேயின் அனுபவமும் ஆற்றலும் நெஸ்பிறேக்கு உறுதுணைகளா கும்.

நெஸ்பிறே ஆடை நீக்காத பால் மா 28% கொழுப்பும் புரதச்சத்தும் விற்றமின்களும் நிறைந்தது; சுகாதாரமாகப் பொதிசெய்யப் பட்டது.

இன்றே உங்கள் குழந்தைக்கு நெஸ்பிறே கொடுக்கத் தொடங் குங்கள். காலையில் முதல் ஆகார மாக... விளையாடிக் களைப்புற்ற தும்... நித்திரை கொள்ளுமுன்.. எவ்வேளை பருகினாலும் நெஸ்பி றேயின் அற்புத சுவையை அவர் கள் நிச்சயம் விரும்புவார்கள். அவர்களின் வளர்ச்சி கண்டு நீங்கள் மகிழ்வீர்கள்.



க்கும்

மைக்கும் நெஸ்லே வழங்கும்




நெஸ்லே வழங்கும்

நெஸ்பிறே வளரும் பிள்ளைக்கு வாய்த்த பால்

400 கிராம் ரூ. 28/90 900 கிராம் ரூ. 85/00

Nestlé

Grant K & E 4970

# 'ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க உழைப்போம்'

## கல்லூரி நிகழ்ச்சியில் கருத்து

(மட்டுவில்)

"ஒரு சமுதாயத்தை சிறந்த கல்வி, ஒழுக்கம், பண்புள்ள சமுதாயமாக்கும் பொறுப்பு கல்லூரிகளுடையது. இப்படியான கல்லூரிகளின் உயர்வுக்காக உழைப்பதன் மூலம் நாம் இந்த நாட்டில் ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க உதவியவர்களாவோம்'

இவ்வாறு சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'ஒருங்கு கூடல்' நிகழ்ச்சியின் போது பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி ஜீ. பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் யாழ். பெனின்சுலா சோப் ஸ்தாபன அதிபர் திரு. ரி. எஸ். மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்

[8-ம் பக்கம் பார்க்க]

# பட குகள் நிற்பதால் பிரயாணிகள் கஷ்டம்!

(நயினாதீவு)

குறிகாட்டுவான்—நயினாதீவு இறங்கு துறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகள் அவற்றின் சேவை முடிவுற்றபின்பும் துறைமுகத்தில் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால். தாய்மார்கள், குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகள் உட்பட, பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். படகில் இருந்து துறைமுக மேடையில் இறங்குவதற்கு 3, 4 படகுகளைக் கடந்துவருவதே இவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் அசௌகரியமாகும் தற்போது கடல் கொந்தளிப்பாக இருந்தும் இப்படியான நிலைமையும் காணப்படுவதால் இப்பகுதிகளில் பிரயாணம் மேற்கொள்வோர் கவலைப்படுகின்றனர்.

# "மாதர்சங்க உறுப்பினர்கள் சிறுகைத்தொழில்களைசெய்ய முன்வரவேண்டும்"

[சாவகச்சேரி]

"மாதர்சங்க உறுப்பினர்கள் கட்டிடத்தை கட்டிவிட்டு சும்மா இருக்காது-சிறுகைத் தொழில்களைச் செய்ய முன்வர வேண்டும். இதில் எந்தத் தொழில் என்ற வேறுபாடில்லாமல் செய்தல்வேண்டும். அப்பளம் தயாரித்தல், பன்னவேலை போன்றவற்றை உடனடியாக ஆரம்பித்து அவற்றினைச் சந்தைப்படுத்த கூட்டுறவுக்கிளைகளின் உதவியை நாடவேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராஜா நாவற்குளி மாதர் சங்கக் கட்டிடத்திறப்பு வைபவத்தின் போது பேசுகையில் தெரிவித்தார்.

மாதர் சங்கத்தலைவி, திருமதி சிவமணி அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தின் போது, சாவகச்சேரி ப. நோ. கூ. ச. வின் பாரியார் திருமதி இரகுபதி நவரத்தினம் கட்டிடத்திறப்பு வைபவத்தினை சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இக்கட்டிடம் கட்டுவதற்கான ஒரு பரப்புக் காணியினை பிரபல சமூக சேவையாளரும் ஓய்வு பெற்றதபால் இணைக்கள உயர் அதிகாரியான திரு. சோ. சடாச்சரம் அன்பளிப்புச் செய்திருந்தார்.

இக்கட்டிடத்திற்கான நிதியாக ரூபா 60'000 ஐ சாவகச்சேரி பா. உ. தமது 1983-ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சமயாசமய சாதாரண தொழிலாளர் நிரந்தரமாயினர்

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடந்த பல வருடகாலமாக சமயா சமய சாதாரணத் தொழிலாளராக கடமையாற்றி வந்த 72 பேருக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 36 பேர் பெண் ஊழியர்களாவர்.

இவர்கள் சமயா சமய ஊழியர்களாக கடமையாற்றிய வைத்தியசாலைகளிலேயே இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இம்மாதம் 10-ம் திகதியன்று நடைபெற்ற நேர்முகப்பரீட்சையை அடுத்து மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டன. யாழ் சுகாதார சேவை கண்காணிப்பாளர் டாக்டர் கே மாணிக்கம், யாழ் சுகாதாரப் பிரிவு நிர்வாக உத்தியோகத்தர் திரு. பொ. இராசேந்திரம் ஆகியோர் இதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்தினர்.

# மன்னாரில் அனுதாப, கண்டன தீர்மானங்கள்

[மன்னார்]

திருமலையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிப்படைந்த தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் திருமலையில் இடம்பெற்ற வன்செயலை உரிய நேரத்தில் தடுத்து நிறுத்தாததால் அரசாங்கத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் மன்னார் மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

இக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை மன்னார் எம். பி, சூசைதாசன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு வி. கைலாசபிள்ளை, அடம்பன் பிரதேச சபைத் தலைவர் திரு. எஸ். சௌந்தரநாயகம், மன்னார் பிரதேசசபைத் தலைவர் திரு. ஏ. ஈ, வர்ணகுலசிங்கம் ஆகியோருட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானம் வருமாறு:- திருமலையில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கவென மன்னார் மாவட்டத்தில் நிதி சேகரித்தல்.

இந்நிதி பொது நிதியாகச் சேகரிக்கப்பட்டு திருமலை எம். பி. திரு. சம்பந்தன் ஊடாக வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவது

இத்துடன் மன்னாரில் நடைபெறவுள்ள மாநில மகாநாட்டிற்கென சேகரிக்கப்பட்ட நிதியில் மிகுதியையும் திருமலை வன்செயலில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்குவது.

# விளாவெளி மயானம்: சங்கானை உப அலுவலகமே கவனிக்க வேண்டும்!

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு விளாவெளி மயானம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் சங்கானை உப அலுவலகப்பகுதியில் அமைந்துள்ளதாகவும், ஆகவே இந்த மயானத்தின் புனரமைப்பு வேலைகளை சங்கானை பட்டின உப அலுவலகமே மேற்கொள்ளவேண்டும் என்றும் யாழ்மாவட்ட அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. மயில்வாகனம் தெரிவித்தார். சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சில்லாலை, பிரான்பற்று, தொட்டிலடி ஆகிய இடங்களிலுள்ள சுமார் 25 ஆயிரம் இந்துமக்கள் பாவித்து வரும் இந்த விளாவெளி மயானம் கடந்த பல வருடகாலமாக புனரமைப்பு எதுவும் செய்யப்படாத நிலையில் முட்செடிகளும், பற்றைகளும் நிறைந்திருப்பதாகவும் இதனால் இங்கு பிரேதங்களை தகனஞ்செய்யச்செல்லும் மக்கள் மிகுந்த சிரமமடைவதாகவும், இதற்குப்பொறுப்பாகவுள்ள பண்டத்தரிப்பு உப அலுவலக நிர்வாகம் இதை புனரமைக்க நடவடிக்கை

(8-ம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவ வாலிபர்களின் முன்மாதிரிக்குப் பாராட்டு

(புலோலி)

உவெஸ்லி வாலிபர் கழகம் கிறிஸ்தவ வாலிபர்கள் தம்மைத் தாமே புரிந்துகொண்டு எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக வாழ வழி வகுத்து வருகின்றது. வைத்தியசாலைகளில் வேதனையோடு இருப்பவர்களைச் சந்தித்து அவர்கள் குணமடைவதற்கு ஜெபிப்பதுடன் அனாதை இல்லங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு உதவியும் இறைவனின் கருணையை விளக்கியும் நற்பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வரும் இக்கழகத்தின் சேவை பாராட்டப்படவேண்டியது.

இவ்வாறு யாழ் பரி. பேதுரு மெதடிஸ்த தேவாலயத்தின் உவெஸ்லி வாலிபர் கழகத்தின் விற்பனைக் காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டார். யாழ். திண்மர் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டதாவது!

கிறிஸ்தவ வாலிபர்கள் தம்மை இறைபணிக்கு அர்ப்பணித்து அதன்மூலம் பிறரும் நன்மைகளைப் பெற வழி வகுத்துச் சேவையாற்றி வருவது முன்மாதிரியாகும். இவ்வுலகில் நாம் ஒழுங்கான வாழ்வைப் பெறுவதற்கு இறைபணி புரியவேண்டியது மிக முக்கியமாகும்.

இச்சிறந்த பணிகளை நன்கு தொடர்வதற்கும், மேலும் புதிய நற்பணிகளை மேற்கொள்வதற்கும் பொருளாதார நிலை போதாமையினால் இவ்விற்பனைக் கண்காட்சி நடாத்தப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் நிதியை இறைபணிக்கு அர்ப்பணித்து சிறந்த நற்பணிகளை ஆற்ற வேண்டும்.

பரிபேதுரு மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாண சேகர முகாமைக்குரு அருட்திரு எச். ஆர். எம். ஜெயச்சந்திரன் ஆசியுரை வழங்கியிருந்தார். உவெஸ்லி வாலிபர் கழகத் தலைவி செல்வி சுபாஜெ ஜெயராஜா இவ்விற்பனைக் கண்காட்சிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

# தேர்த் திருவிழா

[சுன்னாகம்]

ஏழாலை அம்பலவாணேஸ்வரர் கோவில் தேர்த்திருவிழா இம்மாதம் 14-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது


நல்ல நிலையிலுள்ள
24 ஸ்ரீ 8095
இசுசு லொறி
விற்பனைக்குண்டு.
காரியாலய நேரத்தில்
பார்வையிடலாம்.

மகாராஜா இன்வெஸ்ட்மென் லிமிட்,
122, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24267

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி 'ஷப்ரு'

* நம்பிக்கை * நாணயம்
* பாதுகாப்பு

உங்கள் முதலீட்டிற்கு யாழ் நகரில் அதி உயர் வட்டி தரும் ஒரே நிறுவனம் 'ஷப்ரு'

நிதி உதவிகள்:–

* வர்த்தக விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
* ரி. வி., குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, மின் விசிறி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி என்பவற்றையும் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உடன் விலைக்கு அல்லது தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்

மற்றும் தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LIMITED

(மத்திய வங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்)

61, நியூ புல்லர்ஸ் வீதி
கொழும்பு-4
தொலைபேசி இல: 589310

207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 22073

## லைசென்ஸ் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

கன்னாதிட்டிச் சந்தியில் கறுப்புக் காருடன் சாரதி லைசென்ஸ் கண்டெடுத்து யாழ்ப்பாணம், கஸ்தூரியார் ரோட்டைச் சேர்ந்த ஆர். சண்முகசுந்தரம் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் "ஈழநாடு' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## அடியார் அ.தி.மு.க. விலிருந்து ராஜினாமா!

சென்னை, ஜூலை 8

எம். ஜி. ஆர். அண்ணாவின் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக குற்றஞ்சாட்டி, அ தி மு க விலிருந்து இன்று அதன் முக்கிய உறுப்பினரான அடியார் ராஜினாமாச்செய்து கொண்டார்! இவர் 'நீரோட்டம்' பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்.

## முள்வேலி அகற்றப்பட்டது

(நயினாதீவு)

நயினாதீவு வைரவர் ஆலயத்தினைச் சுற்றிப்போடப்பட்டிருந்த முட்கம்பி வேலிகள் யாவும் அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் நீக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்குச் சொந்தமான இக்காணியில் இவ்வூர் இருபாலரையினத்தவர் கரபந்தாட்ட மைதானம் அமைத்திருந்தனர், வேலி இடப்பட்டதால் இவர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே தற்போது இவ் வேலிகள் அகற்ற பட்டுள்ளது.

## தொழிற்பயிற்சி நிலைய அடிக்கல் நாட்டுவிழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டிடம் நிறுவப் படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இம் மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ளது. முன்னாள் லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் டாக்டர் ஜெரியம் நல்லையா சம்பிரதாயமுறைப்படி அடிக்கல்லை நாட்டிவைப்பார் (ஜ)


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி, (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச்சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY) கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE), ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாண சீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA) மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.


CROSS TRAVEL SERVICES (PVT) LTD.

Approved Passenger Sales agent in Sri Lanka M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA Phone: 22040 - 22065



புதிய லக்ஸ்பிறே 500




100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26/00 சதம் மட்டுமே. செறிவும், செழுமையும் மிகுந்தவாய்ப்பாடு புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்ரீறியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.

★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைக்கப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது.

தீவு பூராவும் தாராளமாகக் கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சில உண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்
லங்கா மில்க் ஃபூட்ஸ் (சீ. டப்ளியூ. ஈ) லிமிட்டெட்
வெலிசர, ருகம, இலங்கை

## விவசாயிகள் கழக ஆண்டுவிழா

(மன்னார்)

இலுப்பைக்கடவை பாரதி இளம் விவசாயிகள் கழகத்தின் ஆண்டுவிழா இலுப்பைக் கடவை அரசினர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

திரு மை. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு வி. கைலாசபிள்ளை, அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு வி. முருகையா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது இடம்பெற்ற விவசாய அறிவுப் போட்டியில் செல்வி நாகலட்சுமி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு மன்னார் விவசாயப் பணிப்பாளர் ஜனாப் எம். ஐ. எம். முஸ்தபா பரிசில்களை வழங்கினார்

## கஞ்சா சேனைகள் பிடிபட்டன

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் நள்ளிரவு செட்டிகுளம் புகையிரத நிலையத்தில் நடைபெற்ற கொள்ளை, பஸ்எரிப்பு சம்பவங்கள் தொடர்பாக, வவுனியா காட்டுப் பகுதியில் தேடுதல் நடாத்திய பொலிசார், காட்டுக்குள் இரு கஞ்சாசேனைகளை கண்டு பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இரு சந்தேக நபர்களையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர். [மா]

## ஒழுக்கமுள்ள...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். அவர் சிரேஷ்ட வகுப்புக்கு 100 மேசைகளையும், 100 நாற்காலிகளையும் அன்பளிப்புச் செய்வதாக அதிபரிடம் உறுதியளித்தார்.

மேலும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம், சட்டத்தரணி எஸ். கே. பிரியநாயகம், சட்டத்தரணி திருமதி நிமலினி அம்பிகைபாலன் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணி அம்பிகைபாலன் தொடர்ந்து பேசுகையில்: இந்த நாட்டில் கல்வி அறிவுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதில் அக்கறையுள்ளோர் வரும் உள்ளனர். தொழிலதிபர் திரு. மகேந்திரன் அவர் பல நன்மையான அபிவிருத்திக்கான அடிப்படையில் நல்ல அன்பளிப்புக்களைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இன்று அவர் கொடுத்துள்ள உறுதிப்பாடும் ஒரு இலட்சியத்தின் முன்னோடி என்பதை எடுத்துக் காட்டுகிறது. வேறும் பலர் பேசினர்.

## நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்துள்ள தச்சுத் தொழில் பயிற்சி நிலையத்திற்குத் தேவையான யந்திர சாதனங்களையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக 60 ஆயிரம் ரூபாவை இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## விளாவெளி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரி கடந்த வாரம் 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. இச்செய்தி பற்றி பண்டத்தரிப்பு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. மயில்வாகனம் கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்ட விளாவெளி மயானம் சண்டிலிப்பாய் உப அலுவலகப்பகுதியிலேயே அமைந்துள்ளதாகவும் அவர்களே இந்த மயானத்தை நிர்வகிப்பதால் புனரமைப்பு வேலைகளை சண்டிலிப்பாய் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரே மேற்பார்வையிட வேண்டும் என்றும் சொன்னார்.


# அங்கர்

சிறந்ததையே விரும்பும் மக்களால் பெயர் சொல்லி கேட்கப்படுவது




விலை ரூ. 23.00 இலிருந்து

RJA / 3431

நியூசிலாந்து - உலகிலேயே செழுமையான பால பண்ணைகளைக் கொண்டது அதோடு உலகிலேயே அமோகமானபால தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வது, அவற்றை அங்கர் சின்னத்துடன் விற்பனைப்படுத்துவது.

பசுமையான பூமியிலிருந்து பசுமையானபால் கிடைப்பதே அங்கரின் சிறப்புக்கு அஸ்திவாரமாகும் இதற்கான சான்றுகள்தான் சர்வதேசபுகழ் ரகங்களான பால் மாவுகள், சீஸ்கள், பட்டர்கள் மற்றும் விசேஷ உணவுத்தயாரிப்புகள்.

ஆகையால்தான் சிறந்த தரத்தை விரும்பும் மக்கள் அங்கர் என பெயர் சொல்லிக்கேட்கிறார்கள்...அதுவும் உலகில் பல பாகங்களிலுமுள்ள 100 நாடுகளிலுள்ளோர்.

அங்கர்

—இயற்கை நலம் மிக்கது!

ஏக ஏஜண்டுகள்:
ஜோன்ஸ் ஓவர்சீஸ் லிமிட்டெட்
7 பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி 35166/26351-3

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
முத்துராமன்—தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

ராஜன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்—ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ்: 10.30, 2.30, 6.30 மட்டும்
இன்னும் சில தினங்கள் மட்டும்
இப்பொழுது மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது!
சிவாஜி, லட்சுமி
மனோரமா, தேங்காய்
தியாகம் வண்ண சித்திரம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
9-30
பிரதாப்—சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
மணாளனே
மங்கையின் பாக்கியம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-30, 6-15, மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த - 8வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00.
(யாழ். நகர்)
BRUCE LEE'S (Karate Film)
Exit the Dragon,
Enter the Tiger
From 11-7-83 THE EMPIRE STRIKES BACK

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
இன்று மட்டும்
CHUCK NORRIS in
An Eye For An Eye
From 11-7-83
HAIR
Don't Miss This Musical Bonanza-Top Bands

றீகல் - Regal தினசரி 10-30, 2-00, 4-30
7-30, 9-30 P.M.






ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
கபீர்பேடி.....
சனம் சூரி..
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL
FROM
INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயதுவந்தவர்கள்
மட்டும்


## இன்று

(வண்ணார்பண்ணை)

ஈழத்துச் சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் காரை நகர் அரசடிக்காடு கதிர்வேலாயுதசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் இம்மாதம் 24ம் திகதி தேர்த் திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. தீர்த்தோற்சவம் ஈழமையேசன் வியாவில் ஐயனார் கோவில் தீர்த்தக்கரையில் நடைபெறவிருக்கிறது. அன்றையதினம் மாலை ஆலயமுன்றலில் திருவிளக்கு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## பயிற்சி வகுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுக்கான மாவட்ட மட்டத்திலான பயிற்சி வகுப்பு ஒன்று தாழ்வுபாடுகிராமத்தில் நடைபெற்றது.

மன்னார் தேசிய கூட்டுறவு சபை செயலாளர் திரு. பி. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிவகுப்பில் கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த கல்வி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. யோகராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஏ)

## கோரிக்கை

(நெடுந்தீவு)

மீன்பிடி அமைச்சு தீர்மானித்தபடி நெடுந்தீவில் மீன் உணவு நிலையத்தை விரைவில் நிறுவுமாறு நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் மீன்பிடி அமைச்சரைக் கேட்டுள்ளது. தற்சமயம் இந் நிலையத்திற்குத் தேவையானசிறிய கட்டிடங்கள் மீன்களைப் போதிய அளவு பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கழகம் தெரிவித்துள்ளது. (ஏ)


பக்டாடில் (இராக்)
வெற்றிடங்கள்
1. சாரதிகள்
2. கூலியாட்கள்
3. ஓட்டோ எலக்ரிஷன்
4. கிறஷர் ஒப்பரேட்டர்
5. ரயர் பிற்றர்
நேரில் தொடர்பு கொள்ளவும்.
Labour Licence NO: 292
சு. ஸ்ரீபாஸ்கரன்:
தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
மல்லாகம்.
7913

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
புதிய வகுப்புகள் ஆரம்பம் 30-7-1983
1. கொம்பியூட்டர் புரோகிறமிங்
2. மோட்டர் மெக்கானிசம்
3. எலெக்ரிக்கல் வயறிங்
4. வெல்டிங்
மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் இருப்பதால் விரைவில் விண்ணப்பப் படிவங்களை பதிவாளரிடம் பெற்று விண்ணப்பிக்கவும்.
பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
7921

விற்பனைக்கு
12—15 அடி உயர புதிய குரோமியம் முலாம் பூசப்பட்ட கொடிஸ்தம்பம் 12—35—45 இறாத்தல் எடையுள்ள ஆலய மணிகள் விற்பனைக்குண்டு.
பூரண விளக்கத்திறனுடைய பூஜைக்குப் பயன்படும் பித்தளை வெண்கல விளக்குகள் விற்பனைக்குண்டு.
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
251, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(7860)

கடைசி 2 தினங்கள்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா
ஜெமினி - சாவித்திரி
சரஸ்வதிசபதம்
(ஈஸ்மன்ட் கலர்)
12-7-83 முதல்
பாக்கியராஜ் நடித்த
அந்த ஏழு நாட்கள்


## திருமண அழைப்பு

11 - 07 - 83 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிமுதல் 3 மணிவரையுள்ள சுபவேளையில்

| செல்வன் திருஞானசம்பந்தபிள்ளை அவர்கட்கும் | செல்வி சியாமளா அவர்கட்கும் |
|---|---|

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற விருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

| ந. சிவராசாவும் பாரியாரும் | வ. செல்லத்தம்பியும் பாரியாரும் |
|---|---|
| துன்னாலை தெற்கு கரவெட்டி. | சட்டத்தரணி நீதிமன்ற வீதி பருத்தித்துறை. |

7908


ஆர்பிக்கோ
பொருட்களுக்கு
ஐந்துவீத கழிவு
சகல மரத்தளபாடங்களுக்கும்
நகரில் பிரபல்யமிக்க ஸ்தாபனம்

டில்கா பேணிச்சர் பலஸ்,
234 – 236, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24186

